Written by
Thursday, 07 May 2009 20:20 - Last Updated Wednesday, 13 May 2009 18:39

□□□□□ நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் மு.க. அழகிரி, "தி.மு.க. கூட்டணி வேட்பாளர் அழகிரி வந்திருக்கனே், எனக்கு ஓட்டுப் போடுவீங்களா?" என்று அழகம்மா என்ற வாக்காளரிடம் @கட்க, அவரோ "நாங்க ஓட்டுப் போடுவோம் நீங்க எப்ப நோட்டைப் போடுவீங்க?" என்று எதிர்களேவி கேட்டிருக்கிறார். இந்தியத் தேர்தலில் பணநாயகம் பல்லிளிப்பதைக் காட்டும் ஓரு சோற்றுப் பதம் இது.

தேர்தலில் வாக்குறுதிகளைக் கொடுத்த காலம் போய், கொள்ளையடிப்பதில் மக்களுக்கும் பங்காக "இலவசங்கள்" கொடுத்த காலமும் போய், ஓரு ஓட்டுக்கு இவ்வளவு ரூபாய், எங்க வீட்டில் இவ்வளவு பேர், இவ்வளவு ரூபாய் கொடுங்கள் என வாக்காளர்களே, வேட்பாளரதை் தேடிச் சலெல்லும் புதியதொரு பரிணாமத்தை இந்தியத் தேர்தல் களம் தொட்டுள்ளது. திருமங்கலம் இடதை்தேர்தல் தந்த படிப்பினையில் வாக்காளர்கள் இவ்வாறு விழிப்படநை்திருப்பதால், அதற்கேற்ப அரசியல் கட்சிகளும் தங்களது வேட்பாளர் பட்டியலையும், தேர்தல் பட்ஜெட்டையும் தயாரித்துள்ளன.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைப் பார்த்தாலே இது புரிந்துவிடும். தி.மு.க. சார்பில் ஸ்ரீ பெரும்புதூரில் போட்டியிடுபவர் திரகைடல் ஓடி திரவியம் தேடிய டி.ஆர்.பாலு. மன்மோகன் அரசில், கப்பல் போக்குவரத்துத் துறையின் அமசை்சராக "உழதை்துச் சேர்த்த' பணத்தகை் கொட்டியிறதை்து எந்தத் தொகுதியையும் தேர்தல் சமயத்தில் வளமாக்கக் கூடியவர் என்பதால், அன்னாருக்கு எல்லாத் தொகுதியிலும் வறெ்றி வாய்ப்பு அதிகம்.

அடுத்தது, மத்திய சனெ்னை வேட்பாளர் தயாநிதி மாறன். சன் டி.வி., தினகரன் பத்திரிக்கை எனப் பெரும் ஊடகங்களகை் கையில் வதை்துக் கொண்டு தி.மு.க.வயேே ஓரு கலக்கு கலக்கியவர். ஊடக பலமும் பண பலமும் ஓருங்கே அமநை்த இவ ரது வளர்ச்சி கண்டு கருணாநிதியின் கூடும்பமே கதிகலங்கிப் போனது. இந்தக் கலக்கத்தின் விளவைாகக் கல்லாக் கட்டிய ஸ்பெக்ட்ரம் புகழ் ராசாவோ நீலகிரி தொகுதியில் நிற்கிறார்.

Written by
Thursday, 07 May 2009 20:20 - Last Updated Wednesday, 13 May 2009 18:39

[redacted]